23.10.2024 **OS.No. 66/2020**

**பி.வா.சா.1 பெயர்: பசுபதி** த/**பெ. துரைசாமி**

**சாட்சி ஆஜர்.** சத்திய பிரமா**ணம் செய்யப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

கோவிலை நாங்கள் கட்டியதற்கான ஆதாரம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. கோவில் முன்பு உள்ள கிரில் கதவு யார் கொடுத்தது என்றால் தேர்தல் சமயத்தில் நன்கொடை வழங்கப்பட்டது. கோவிலுக்கு EB கனக்சன் உள்ளதா என்றால் இல்லை. மாதப்பன் பெயரில் தான் EB கனக்சன் கோவிலுக்கு உள்ளது என்றால் சரியல்ல. கோவில் சிங்க வாகனம் எங்கிருந்து கொண்டுவரப்பட்டது என்றால் காஞ்சிபுரத்தில் இருந்து கொண்டுவரப்பட்டது. அன்றைய தினம் நான் வீட்டில் இல்லாததால் சரியாக தெரியவில்லை. கோவிலுக்கு பொது நகைகள் உள்ளதா என்றால் இல்லை. கோவிலை அளந்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் பிரதிவாதி தரப்பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மின்சார ரசீதுகள் கோவிலுக்காக செலுத்தியது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளை கோவிலுக்கு வரக்கூடாது என எப்போது தடுத்தோம் என்றால் சாமி கும்பிட தடுக்கவில்லை. 4,5 வருடங்களுக்கு முன்பு பிரச்சனை ஏற்பட்ட போது தடுத்தோம். கோவில் கட்டபட்ட நாள் முதல் கோவிலின் சாவி பிரதிவாதிகளிடம் இருந்தது என்றால் சரியல்ல. எங்களிடம் தான் இருந்தது. சாலையை ஆக்கிரமிப்பு செய்தோமா என்றால் இல்லை. பிரதிவாதிகள் உயர்நீதிமன்றத்தில் மனு செய்து உத்தரவு பெற்ற பிறகு தான் நாங்கள் ஆக்கிரமிப்பு செய்திருந்த இடத்தில் ரோடு போட்டார்கள் என்றால் சரியல்ல. நாங்கள் நிலத்தை வாங்கியது முதல் அங்கு உழவு செய்து வந்தோம் பிறகு சாலை போடுவதற்கு எடுத்துக் கொண்டார்கள். 19.11.2019 அன்று மாவட்டஆட்சியர் போட்ட உத்தரவில் நாங்கள் ஆக்கிரமிப்பு செய்திருந்தது தெளிவாக குறிப்பிடபட்டுள்ளது என்றால் ஆகிரமிப்பு செய்யவில்லை. பிரதிவாதிகள் உயர்நீதிமன்றம் சென்று உத்தரவு வாங்கி வந்தார்கள் என்றால் அது பற்றி தெரியாது. கோவிலானது பிரதிவாதிகள் பராமரிப்பில் இருந்தது என்றும், வழக்கிற்காக மறுத்து சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கோவில் நிலம் பிரதிவாதிகள் பெயரில் உள்ளது என்பதற்கு அவர்கள் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக மறுத்து சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

ஒம்/- திருமதி. G.கலைவாணி, பி.ஏ., பி.எல்.,
சார்பு நீதிபதி, சார்பு நீதிமன்றம்,
ஊத்தங்கரை.